

கடலூர் மேற்கு மாவட்டம், திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி, மங்களூர் வடக்கு ஒன்றியம், அரியநாச்சி ஊராட்சியில் தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் அண்ணா அவர்களின் 117 வது பிறந்த நாளையொட்டி "தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன் எனும் உறுதிமொழியை அமைச்சர் சி.வெ.கணேசன் கழக நிர்வாகிகளும், பொதுமக்களும் உறுதிமொழி ஏற்று நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் பள்ளிப்பட்டு பேரூரில் 100 மேற்பட்ட த.வெ.க, அதிமுகஉள்ளிட்ட மாற்றுக்கட்சியினர் ஒன்றிய கழக செயலாளர் சி.ஜெ.சீனிவாசன் ஏற்பாட்டில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்கள் இந்நிகழ்ச்சியில் பேரூர் கழகச் செயலாளர் சி. ஜெ.சீனிவாசன், பேரூராட்சி மன்ற தலைவர் மணிமேகலை, அவைத் தலைவர் திருமலை லோகநாதன், மாவட்ட பிரதிநிதி செங்கய்யா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

‘பேரறிஞர் அண்ணா 117 வது பிறந்தநாளில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட

# திரு.வி.க. நகர் வடக்கு பகுதியிலுள்ள 99 பாகங்களில் உறுதிமொழி ஏற்பு!

## அமைச்சர்-மாவட்ட செயலாளர் பி. கே. சேகர்பாபு பங்கேற்பு!

சென்னை,செப்.16

கழகத்தலைவர் அவர்கள் செப்டம்பர் 15 ஆம் நாள் பேரறிஞர் அண்ணா 117 வது பிறந்தநாளில் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்த குடும்பங்கள், பூத் கமிட்டியினர் கலந்து கொள்ளும் வாக்குச்சாவடி அளவிலான உறுதிமொழி முன்மொழிவுக் கூட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் 68,000 வாக்குச்சாவடிகளிலும் நடைபெற வேண்டும் என்ற அறிவுறுத்தல் படி சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட 1377 பாகங்களிலும் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி, திரு. வி.க.நகர் வடக்குபகுதியில் உள்ள 99 பாகங்களிலும் நடைபெற்ற உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான பி.கே. சேகர்பாபு அவர்கள் 74அ







வட்டத்தில் உள்ள 20 வது பாகத்தில் கலந்து கொண்டு உறுதிமொழி ஏற்றார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, கே எஸ்.ரவிச்சந்திரன், கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா என் கிருஷ்ணமூர்த்தி, வட்டக் கழகச் செயலாளர்கள் எஸ். புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், மற்றும் கழக முன்னோடிகள் செயல் வீரர்கள் பி எல் ஏ 2,பி டி ஏ, பி ஒய் ஓ ஆகியோர் கலந்துகொண்டு உறுதிமொழி ஏற்றனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 208 வது நாள்!

## எழும்பூர் வடக்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,செப்.16-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 208 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (15.09.2025), எழும்பூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 77 அ சிவராவ் ரோடு, பட்டாளம். 2) வட்டம் 78 அ வி. வி கோயில் தெரு, சூளை, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.





இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், சொ.வேலு, வி.சுதாகர், பி.எம்.யாழினி, கோ. ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன், கோ.மணி, நிர்மலாதேவி. மாமன்ற உறுப்பினர்கள்: B.சுமதி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, ஜி.தாமோதரன், எழும்பூர் வடக்கு தெற்கு பகுதி செயலாளர்கள்: வி. அபாய், தி.தயாளன், சு.மனோகர், ந.பாலு, ஆர். எம்.ரங்கநாதன், சி.சேகர், வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்வின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல். சுந்தர்ராஜன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கம் மூலம் - திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில்

# 2 லட்சத்து 25 ஆயிரம் பேர் தி.மு.க.வில் இணைந்துள்ளனர்!

## மாவட்டக் கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் பேட்டி!

திருவள்ளூர் செப் 16:

ஓரணியில் தமிழ்நாடு இயக்கம் மூலம் பொன்னெரி கும்மிடிப்பூண்டி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் 2.25 லட்சம் பேரு இணைந்துள்ளதாக வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தெரிவித்துள்ளார். வல்லூரில் உள்ள திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் மாவட்ட கழக பொறுப்பாளர் செய்தியாளர்களிடம் பேசினார்.

இன்று நாம் எதிர்கொள்ளும் பண்பாடு, பொருளாதாரம் மற்றும் அரசியல் அநீதிகளுக்கு எதிராகத் தமிழ்நாட்டு மக்களை ஓரணியில் ஒன்றிணைக்கவும், தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்கவும் கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் ஜீலை 1ம் தேதி அன்று ஓரணியில் தமிழ்நாடு



என்ற மக்கள் இயக்கம் தொடங்கப்பட்டது

. அன்றிலிருந்து இன்று வரை தமிழ்நாடு முழுவதும் சுமார் 1 கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்த இயக்கத்தில் இணைந்துள்ளனர். இதில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் மட்டும் 2 லட்சம் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நபர்கள் ஓரணியில் தமிழ்நாடு என்ற இயக்கத்தின் கீழ் இணைந்து கழகத்தின் கரங்களுக்கு வலு சேர்த்துள்ளனர்.

பொன்னேரி தொகுதியில் 1 லட்சத்து 15 ஆயிரம் பேர் கும்மிடிப்பூண்டி தொகுதியில் 1 லட்சத்து 10 ஆயிரம் பேர் திமுகவில் இணைந்துள்ளனர்

இதன் அடுத்த கட்டமாக வரும் செப்டம்பர் 15 அன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 68 ஆயிரம் வாக்குச்சாவடிகளிலும் தமிழ்நாட்டைக் காக்கும் உறுதி மொழியை முன்மொழியும் கூட்டங்களை நடத்தி அனைவரும் ஒன்று கூடி தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்கத் தீர்மானங்கள் முன்மொழிய இருக்கிறோம்.

இந்நிலையில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் 643 வாக்குசாவடிகளில் இன்று

நான், தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விகிதாசாரத்தைக் குறைக்கும் நியாயமற்ற தொகுதி மறுவரையறைக்கு எதிராகப் போராடுவேன்; தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன்

. நான், வாக்காளர் பட்டியல் மோசடி மூலம் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் SIRக்கு எதிராக நிற்பேன்; தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன்

. நான், நீட் மற்றும் இளைஞர்களை முடக்கும் எந்தவொரு திட்டத்தையும் எதிர்த்து நிற்பேன், நம் மாணவர்களுக்கு உரிய கல்வி நிதிக்காகப் போராடுவேன்; ஒருபோதும் தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன்

நான், தமிழ் மொழி, பண்பாடு மற்றும் பெருமைக்கு (நன்மதிப்பிற்கு) எதிரான எந்தவொரு பாகுபாட்டையும் எதிர்த்துப் போராடுவேன். எதற்காகவும் தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன்

* நான் ‘பெண்கள் விவசாயிகள் மீனவர்கள் நெசவாளர்கள் உழைக்கும் வர்க்கத்தின் நலன்களையும் பாதுகாக்கத் தொழிலாளர்கள்’ என ஒவ்வொரு தேவையான நிதிக்காகப் போராடுவேன். தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன் என உறுதிமொழி கூட்டங்கள் நடைபெற உள்ளது.

செப்டம்பர் 17 அன்று கரூரில் நடைபெறும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முப்பெரும் விழாவில் கழகத்தலைவர் அவர்களின் தலைமையில் நிறைவேற்றப்பட்டு தமிழ்நாட்டின் ஒற்றுமைக்கு எதிரான சக்திகளைத் தமிழ்நாட்டில் இருந்து நிரந்தரமாக அகற்றி, தமிழ்நாட்டை என்றும் தலை குனிய விடாமல் பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழியில் கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களோடு இணைந்து தமிழ்நாட்டின் உரிமைகளை நிலை நாட்டுவோம்.

தொடர்ச்சியாக வரும் 20.ம் தேதி மாவட்ட அளவில் ஓரணியில் தமிழ்நாடு தீர்மானக் கூட்டங்கள் நடைபெற உள்ளதாக என அவர் தெரிவித்தார் .



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க.சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 117 வது பிறந்த நாள் விழா முன்னிட்டு திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கழக கொடி ஏற்றி 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கி தமிழ் நாட்டை தலைகுனிய ஏற்கமாட்டோம் என உறுதி மொழி எடுக்கப்பட்டது. இதில் குறிஞ்சி எஸ்.கணேசன், டி.ஏ.ராஜ், சாந்தி பக்தன்,எம். வி.குமார், கே.பிரபாவதி, ஆர்.குமரேசன், த.கார்த்திகேயன், டி.சி.வி.மணிகண்டன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



திராவிட முன்னேற்றக் கழகத்தை தோற்றுவித்த வரும் சமுதாயப் புரட்சிக்கு வித்திட்டவருமான தென்னாட்டு பெர்னாட்ஷா, இன்னாட்டு இங்கர்சால் அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா அவர்களின் 117 வது ஆண்டு பிறந்த தினத்தை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் கிழக்கு பகுதி, பெரியார் நகரில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு தலைமை பொது குழு உறுப்பினர் இரா .முருகேசன் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் எட்டாவது வட்டக் கழகச் செயலாளர் டி.சி.வி. மணிகண்டன், திருவொற்றியூர் கிழக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.எம். மணிகண்டன், அபூபக்கர் சித்திக் மற்றும் கழகத் தோழர் கள் உடன் இருந்தனர்.

சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

# “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்

சென்னை,செப்.16-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் இன்று (16.09.2025) திருவொற்றியூர் மண்டலம் (மண்டலம்-1), வார்டு-5ல் எண்ணூர் விரைவு சாலையில் உள்ள படவேட்டம்மன் கோவில் திறந்த வெளி இடம், மணலி மண்டலம்

(மண்டலம்-2), வார்டு-17ல் வடபெரும்பாக்கம், எம்.ஆர்.எச். சாலையில் உள்ள சமுதாயக் கூடம், இராயபுரம் மண்டலம் (மண்டலம்-5), வார்டு-51ல் காளிங்கராயன் தெருவில் உள்ள அண்ணா திருமண மண்டபம், திரு. வி.க. நகர் மண்டலம் (மண்டலம்-6), வார்டு-72ல் புளியந்தோப்பு, டி’காஸ்டர் சாலையில் உள்ள டான் பாஸ்கோ, அம்பத்தூர் மண்டலம் (மண்டலம்‘-7), வார்டு-91ல் முகப்பேர் மேற்கு, மோகன்ராம் நகர், வெள்ளாளர் தெருவில் உள்ள சுப்ரபா மஹால், அண்ணாநகர் மண்டலம் (மண்டலம்-8), வார்டு-100ல் செனாய் நகர், டி.பி. சத்திரம் பிரதான சாலையில் உள்ள அண்ணா சமூக கூடம், தேனாம்பேட்டை மண்டலம் (மண்டலம்-9), வார்டு-113ல் தியாகராயநகர், அபிபுல்லா சாலையில் உள்ள எஸ்.ஜி.எஸ் சபா, கோடம்பாக்கம் மண்டலம் (மண்டலம்-10), வார்டு-135ல் அசோக் நகர், 1வது அவென்யூவில் உள்ள லட்சுமி மஹால், பெருங்குடி மண்டலம் (மண்டலம்-14), வார்டு-181ல் கொட்டிவாக்கம், ஏ.ஜி.எஸ். பிரதான சாலையில் உள்ள கபடி மைதானம், சோழிங்கநல்லூர் மண்டலம் (மண்டலம்-15), வார்டு-192ல் நீலாங்கரையில் உள்ள ஆர்.கே. கன்வென்சன் சென்டர் ஆகிய 10 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொது மக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் "உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் எம். எஸ். கே.ரமேஷ்ராஜ் அறிவுறுத்தலின்படி ஆரணி பேரூர் திமுக கழகத்தின் சார்பில் ஆரணி பேருந்து நிலையம் அருகில் உள்ள அண்ணா சிலைக்கு பேரூர் கழகத்தின் செயலாளர் பி. முத்து, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ். ரோஸ் பொன்னையன் ஆகியோரது ஏற்பாட்டில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. ஒன்றிய செயலாளர் நா, செல்வ சேகரன் கலந்து கொண்டு உறுதிமொழி ஏற்று இனிப்பு வழங்கினார். இந்த நிகழ்ச்சிக்கு ஆரணி பேரூர் கழகத்தின் முன்னாள் செயலாளர்கள் ஜி.பி. வெங்கடேசன், பி. கண்ணதாசன், கே. கரிகாலன், ரமேஷ், ஆர். கலையரசி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றிய பேரூர் திமுக சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா நடைபெற்றது. இதில் ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன் தொகுதி பொறுப்பாளர் ராணி ரவிச்சந்திரன் பேரூர் செயலாளர் பாரிவல் பேரூராட்சித் தலைவர் எஸ். சசிகுமார் ஆகியோர் அறிஞர் அண்ணா படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கி தமிழ்நாட்டை தலைய குனிய விடமாட்டோம் என்று உறுதிமொழி ஏற்றனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளையொட்டி, ஓரணியில் தமிழ்நாடு காணும் கழகத் தலைவர், முதல்வர் அவர்களின் வழிகாட்டுதல்படி, திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ராமேஷ்ராஜ் அறிவுறுத்தலின்படி, திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்முடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டி பேரூர் கழக சார்பில், ‘தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்’ உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். இதில் கழக மாநில தகவல் தொழில்நூட்ப அணி துனை செயலாளர் சி.எச்.சேகர் , காளிதாஸ், வெங்கடேசன், கோபி, இஸ்மாயில், ஆர்.கீதாராணி, விஜயபிரசாத், ரஞ்சித், வினோத், குமார், புருசோத், ராஜா, சரவணன், மணி, ஏகாம்புரம், பாஷா, குமார், முருகன், செல்வம், இக்கியா மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.